# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### பேச்சு – மேற் பிரிவு (5ஆம் 6ஆம் தர மாணவர்கள்)

# பாட்டுக்கு ஒரு புலவன்

பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் என்ற ஊரிலே பிறந்தார். இவரது தந்தை சின்னசாமி ஐயரும், தாய் இலக்குமி அம்மாளும் இவருக்கு சுப்பிரமணியன் என்று பெயரிட்டனர். இயற்கை அன்னை கவிதை இயற்றும் ஆற்றலை இவருக்குக் கொடுத்திருந்தார். இவரது பாட்டுத் திறமையை அறிந்த மன்னர் இவருக்குப் "பாரதி" பட்டம் சூட்டிப் பாராட்டினார். பின்னர் "பாட்டுக்கு ஒரு புலவன்" என்ற பாராட்டும் இவருக்குக் கிடைத்தது.

பாரதியார் பாப்பாக்களையும் நினைந்து பாப்பாப் பாடல்களையும் இயற்றினார். அவர்களின் பிஞ்சு உள்ளங்களிலே அன்பு, பண்பு, இரக்கம், நேர்மை, ஒற்றுமை, விடாமுயற்சி ஆகிய உயர் குணங்களை விதைத்திட முயன்றார். நாம் வீரர்களாக விளங்க வேண்டும் என விரும்பிய பாரதியார்,

பாதகஞ் செய்வோரைக் கண்டால்
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

எனப் பாடினார்.

பாராதியார் 1921ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பாட்டுக்கு ஒருவரின் வழி நடப்போம்!

நாட்டுக்கு நல்லவராய் நாம் இருப்போம்!

நன்றி! வணக்கம்!!